பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

03 05 2025 **SATURDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு துறையைச் சேர்ந்த பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2. சைவ சித்தாந்தம் தமிழ் கலாச்சாரத்தின் ஆன்மா என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் மருத்துவ கட்டமைப்புகள், உலக நாடுகள் பாராட்டும் வகையில் அமைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

4. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சொத்துவரி 6 சதவீத அளவிற்கு மீண்டும் உயர்த்தப்பட்டுள்ளதாக வெளியான செய்தி, முற்றிலும் தவறானது என்று மாநில அரசு கூறியுள்ளது.

5. **Lopota** ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே – நியூஸிலாந்தின் **Paige Hourigan** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<>>>>>>**

முதலில் வேவ்ஸ் உச்சிமாநாடு குறித்த செய்திகள்

(வேவ்ஸ் மாநாடு – மியூசிக் – 11 நொடிகள்)

ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு துறையைச் சேர்ந்த பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்று வரும் வேவ்ஸ் உச்சிமாநாட்டின் மூன்றாம் நாளான இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு துறையில் உலகளவில் தலைமைத்துவம் பெறுவதற்கான திறனுடன் இந்தியா உள்ளதாக கூறினார்.

· **Animation, Visual Effects, Gaming** மற்றும் **comics** துறைகளுக்கான கேந்திரமாக இந்திய படைப்பாற்றல் தொழில்நுட்ப நிறுவனம் திகழ்கிறது என்று திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்திய படைப்பாற்றல் தொழில்நுட்ப நிறுவனம் - , **Google, Meta, Microsoft** உள்ளிட்ட 7 சர்வதேச நிறுவனங்கள் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

(வேவ்ஸ் மாநாடு — மியூசிக் — 11 நொடிகள்)

**<<<<<<>>>>>>**

சைவ சித்தாந்தம் தமிழக மக்களின் கலாச்சாரத்தில் வலுவாக வேரூன்றிய ஆன்மா என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

சென்னையை அடுத்த காட்டாங்கொளத்தூரில் நடைபெற்று வரும் சர்வதேச சைவ சித்தாந்த மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், புனிதமான கலைகள் மற்றும் கோவில்கள் மூலம் சைவ சிந்தாந்தம் வளர்க்கப்பட்டதாக தெரிவித்தார்.

தேவாரம், திருவாசகத்தை வழங்கிய பூமி தமிழகம் என்றும், தற்போதும் அவை ஈர்ப்புடன் பாடப்படுவதாகவும் அவர் கூறினார்.

காலத்தால் அழியாத அவை, ஞானத்தை அளிப்பதாகவும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

நாளை மறுநாள் வரை நடைபெறும் இம்மாநாட்டில் மத அறிஞர்கள், ஆன்மிக தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் உள்ளிட்ட 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>>**

தமிழக பிஜேபி மைய குழுக் கூட்டம் அக்கட்சியின் தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜெ.பி. நட்டா தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பேசிய திரு. ஜெ.பி நட்டா, மத்திய அரசின் திட்டங்கள் குறித்து பிஜேபி தொண்டர்கள் மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், பாரம்பரியமிக்க தமிழ் கலாச்சாரத்தை பாதுகாப்பதற்கும் பிரதமர் திரு. நரேந்திரமோடி உறுதிபூண்டுள்ளதாகவும் திரு. ஜெ.பி நட்டா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

திமுக பொதுக்குழுக் கூட்டம் அடுத்த மாதம் 1ஆம் தேதி மதுரையில் நடைபெறும் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

சென்னையில் இன்று நடைபெற்ற அக்கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் இதுகுறித்த தீர்மானம் நிறைவேற்றபட்டது.

மாநிலத்தில் ஆயிரத்து 244 இடங்களில் அரசு மேற்கொண்ட திட்டங்கள் குறித்து எடுத்துரைப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் மருத்துவ கட்டமைப்புகள், உலக நாடுகள் பாராட்டும் வகையில் அமைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான மருத்துவக் கல்வி மாநாட்டை இன்று தொடங்கி வைத்துப் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மா. சு 41 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு நோய் பரவுவதை தடுக்கும் வகையில் விலங்குகள் நல ஆர்வலர்கள் அனைவருக்கும் போதிய விழிப்புணர்வை அனைவருக்கும் ஏற்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு மின்வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

‘குரல் இல்லாத விலங்குகளுக்கு குரல் கொடுப்போம்’ என்ற தலைப்பில் தஞ்சாவூரில் இன்று நடைபெற்ற பல்லுயிர் பாதுகாப்பு கருத்தரங்கில் பங்கேற்றுப் பேசிய அவர், பொதுஇடங்களில் கால்நடைகளை வளர்க்கக் கூடாது என்று வலியுறுத்தினார்.

விலங்குகளை துன்புறுத்துவது போன்ற நிகழ்வுகள் ஏற்படாமல் இருக்கும் வகையில், பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

முன்னதாக, செய்தியாளர்களிம் பேசிய அவர், மாநிலத்தில் தற்போது மின்வெட்டு பிரச்சினை இல்லை என்று கூறினார்.

அடுத்த 10 நாட்களில், காற்றாலை மின்உற்பத்தி தொடங்கும் என்றும், அப்போது தனியாரிடம் மின்சாரம் வாங்க வேண்டிய தேவை ஏற்படாது என்றும் திரு. ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சொத்துவரி 6 சதவீதம் அளவிற்கு மீண்டும் உயர்த்தப்பட்டுள்ளதாக வெளியான செய்தி, முற்றிலும் தவறானது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நகராட்சி சொத்து வரி 6 சதவீதம் உயர்த்தப்பட்டதாகவும், தற்போது மீண்டும் 6 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளதாக இன்று நாளிதழ் ஒன்றில் வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 55 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

மாவட்டச் செய்திகள்

நெல்லை மாவட்டத்தில் நாளை நடைபெறவுள்ள நீட் தேர்வுக்கான முன்னேற்பாட்டுப் பணிகள் தயார் நிலையில் உள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

தென்காசி மாவட்டத்தில் 537 தனியார் பள்ளி வாகனங்களின் தரம் குறித்து ஆட்சியர் திரு. கமல் கிஷோர் இன்று ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>>

தேனி மாவட்டத்தில் தனியார் பள்ளி வாகனங்களை இயக்கும் ஓட்டுநர்களுக்கு மருத்துவ பரிசோதனை அளிக்கப்பட்டு, விபத்தில்லா பயணத்திற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

<<<<<<>>>>>>

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தோவாளை மலர் சந்தையில் 2 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பில் கூடாரம் அமைக்கும் பணியினை ஆட்சியர் திருமதி. அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>>

நாமக்கல் மாவட்டத்தில் தேர்தல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சியர் டாக்டர் உமா தலைமையில் நடைபெற்றது.

<<<<<<>>>>>>

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் சாவடிப்பாளையம் அருகே தோட்டத்தில் புகுந்து வெறிநாய்கள் கடித்ததில், 10க்கும் மேற்பட்ட ஆடுகள் உயிரிழந்தன.

<<<<<<>>>>>>

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள மிருகண்டா நதி அணையிலிருந்து வேளாண் பாசனத்திற்கான தண்ணீரை ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் இன்று திறந்து விட்டார்.

**<<<<<<>>>>>>**

விளையாட்டுச் செய்திகள்

**Lopota** ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே – நியூஸிலாந்தின் **Paige Hourigan** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-6, 6-3 என்ற செட்கணக்கில் மெஸிடோனியாவின் **Lina Gjorcheska** – ஜார்ஜியாவின் **Gorgodze Ekaterine** இணையை வென்றது.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ரஸ்மிகா – ரஷ்யாவின் **Alexdra Shubladeze** இணையும் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

**<<<<<<>>>>>>**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் சென்னை இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**<<<<<<>>>>>>**

வேலூர் மாவட்டம், காட்பாடியில் மாவட்ட அளவிலான கால்பந்து போட்டி இன்று தொடங்கியது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 24 அணிகள் பங்கேற்றுள்ளன.

**<<<<<<END>>>>>>**